# கார்களுக்கான அதிவேக மின்னூட்டு சாதனங்கள் செயல்பாட்டுக்கு வந்தன

கிராப் வாடகை கார் நிறுவனம் மின்சார கார்களை இயக்கவுள்ள இவ்வேளையில், மின்சார வாகன அதிவேக மின்னூட்டு சாதனங்களை (படம்) எஸ்பி குழுமம் அமைத்து உள்ளது.

தீவு முழுவதிலும் உள்ள எட்டு இடங்களில் மொத்தம் 38 அத்தகைய சாதனங்களை அது அறிமுகப்படுத்துகிறது. அவற்றில், 43 கிலோவாட் திறனுடைய ஏசி மின்னூட்டு சாதனங்கள் 19. மற்றவை 50 கிலோவாட் திறனுடைய டிசி மின்னூட்டு சாதனங்கள். இந்த மின்னூட்டு சாதனங்கள் உணவகங்களுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளதால் ஓட்டுநர்கள் உணவருந்தும் வேளையில் கார்களுக்கு மின்னூட்ட முடியும்.

அடுத்த ஆண்டுக்குள் எஸ்பி நிறுவனம் அமைக்கப்படவுள்ள 1,000 மின்னூட்டு சாதனங்களில் தற்போது அமைக்கப்பட்டுள்ள 38 சாதனங்கள் முதற்கட்டமாக செயல்பாட்டுக்கு வந்துள்ளன.

இந்த சாதனங்கள் அதிவேக மின்னூட்டு திறன் கொண்டவை. மத்திய அளவிலான மின்சார காருக்கு ஒரு மணி நேரத்துக்குள் மின்னூட்டும் திறன் பெற்றவை. அதற்கு வீடுகளில் இருக்கும் மின்னூட்டிகளுக்கு பொதுவாக ஆறு முதல் எட்டு மணி நேரம் தேவைப்படும்.

இந்த மின்னூட்டு சாதனங்கள் இருக்கும் இடத்தைக் கண்டறியவும் அவற்றைப் பயன்படுத்தவும் எஸ்பி நிறுவனத்தின் செயலியைப் பயன்படுத்த வேண்டும். கார்கள் மின்னூட்டப்பட்டதும் அந்தச் செயலி வழியாகத் தெரிவிக்கப்படும். தற்போதைக்கு டிபிஎஸ் அல்லது பிஓஎஸ்பி வங்கிகளின் பணம் செலுத்து அட்டைகள் மூலம் பணம் செலுத்த முடியும். மற்ற முன்னணி வங்கிகளின் அட்டைகளையும் பயன்படுத்தும் வசதி விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்றது எஸ்பி.




ஏசி மின்னூட்டு நிலைகள் காரை மின்னேற்ற 45 முதல் 60 நிமிடங்கள் எடுக்கும் வேளையில், டிசி மின்னூட்டு சாதனங்கள் அதற்கு சுமார் 30 நிமிடங்கள் எடுக்கும் என்றும் அது தெரிவித்தது. அடுத்த சில ஆண்டுகளில் 350 கிலோவாட் திறனுடைய மின்னூட்டு சாதனங்களை அறிமுகப்படுத்தத் திட்டமிடுவதாகவும் அது குறிப்பிட்டது. உயர்திறனுடைய மின்சார கார்களை 15 நிமிடங்களுக்குள் அவை மின்னேற்றும்.

ஒரு யூனிட் ஏசி மின்னூட்டத்துக்கு 41.4 காசு, டிசி மின்னூட்டத்துக்கு 47.3 காசு என்ற விகிதத்தில் கட்டணம் இருக்கும். இவற்றைப் பயன்படுத்துவதன் மூலம், பெட்ரோல் மூலம் செயல்படும் கார்களுடன் ஒப்பிடுகையில், மின்சார கார்கள் 50% வரை சேமிக்க முடியும் என்று எஸ்பி தெரிவித்தது.

மின்சார கார்களை இயக்கும் தங்களது ஓட்டுநர்களுக்கு கிராப் நிறுவனம் விலைக்கழிவு அளிக்கும் என அறிவதாக ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் குறிப்பிட்டது. கிராப் நிறுவனம் வாங்கவுள்ள ஹுண்டாய் கோனா மின்சார கார்களில் 20ஐ இந்த மாதத்தில் அந்நிறுவனம் பெறும் என்று கூறப்பட்டது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Limited. Permission required for reproduction.